# கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகள்

**1. கூட்டுறவு தொழிற் பயிற்சி மாணவர்களின் கல்விக் கட்டணம் அரசு ஏற்றல்.**

கூட்டுறவுத் துறையின் மூலம் பட்டுக்கோட்டை மற்றும் பர்கூரில் தொழிற் பயிற்சி கல்லூரிகளை தமிழக அரசு நடத்தி வருகிறது. இவற்றில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 22,80,000/- செலவாகும். இதனால் ஏழை எளிய பிரிவைச் சார்ந்த 312 மாணவர்கள் பயன் பெறுவர்.

2. **கொடைக்கானலில் கூட்டுறவு மேலாண்மை படிப்பு மற்றும் பயிற்சி நிலையத்தினை அமைத்தல்.**

தமிழக அரசால் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் தாலுகா மன்னவனூர் வருவாய் கிராமத்தி தேசிய அளவிலான கூட்டுறவு மேலாண்மை படிப்பு மற்றும் பயிற்சி நிறுவனம், 20 ஏக்கர் நிலத்தில் 26,000 ச.மீ. பரப்பில் ரூ.85 கோடி உத்தேச திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். தேவைப்படும் தொகையினை நபார்டு வங்கியிடமிருந்து மானியமாகவோ அல்லது தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிதி அல்லது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு கல்வி நிதியில் (CEF) இருந்தோ பெற்று நிறைவேற்றப்படும். இதனால், அரசுக்கு எந்த நிதி சுமையும் இல்லை.

**3. நியாய விலைக் கடைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்.**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் நியாய விலைக்கடைகளில், 1.7.2021–அன்று உள்ளவாறு, விற்பனையாளர்கள் 3,331 காலிப் பணியிடங்களுக்கும், கட்டுநர் 666 காலிப்பணியிடங்களுக்கும், ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிவிப்பினை ரத்து செய்து, 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளை பின்பற்றியும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்றும், நாளிதழ்களில் புதிதாக அறிவிப்பு வெளியிட்டும், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றியும், பணி நியமனம் மேற்கொள்ளப்படும்.

**4. கூட்டுறவுத்துறை மூலம் நேரடி கொள்முதல் நிலையங்கள் ஆரம்பித்தல்.**

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் நேரடி கொள்முதல் விற்பனை நிலையங்களை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, டெல்டா மாவட்டங்களைத் தவிர்த்து பிற மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை அமைக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 19 மாவட்டங்களில், 68 நேரடி கொள்முதல் நிலையங்களை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட உள்ளன. இது மேலும் விரிவுபடுத்தப்படும்.

**5. மகளிர் சுய உதவிக் குழு கடன்களுக்கு வட்டி விகிதத்தை குறைத்தல், கடன் அளவை உயர்த்துதல் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தல்.**

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்படும்.

- 3 லட்சம் வரையிலான கடன்களுக்கு வட்டி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக குறைப்பதற்கு இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ்நாட்டிலுள்ள 3,63,881 குழுக்களைச் சேர்ந்த 43,39,780 உறுப்பினர்கள் பயன் பெறுவர்.
- தற்போது வழங்கப்படும் கடன் அளவு ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாக உயர்த்தப்படும்
- தமிழகம் முழுவதிலும் உள்ள 3,63,881 மகளிர் சுய உதவிக்குழுக்களையும் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6. கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்.**

கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 7,40,173 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் பயன் பெறுவர்.

**7. கேசிசி திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கு கடன் வழங்குதல்.**

தற்போது, கேசிசி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ. 3.00 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இது விவசாய கடன்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், இனி கால்நடை வளர்ப்பு மற்றும் தொடர்புடைய கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**8. தமிழ்நாட்டிலுள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

தமிழ்நாடு முழுவதும் 6,970 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் வாடகையாக 18.62 கோடி தொடரும் செலவினம் ஏற்படுகிறது.

எனவே, படிப்படியாக ஆண்டொன்றுக்கு 500 கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 500 குடும்ப அட்டைகளுக்கு குறைவாக உள்ள கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு 540 சதுர அடி பரப்பில் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

**9. லாபத்தில் இயங்கும் 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுதல்.**

தமிழ்நாட்டில் முதற்கட்டமாக லாபத்தில் இயங்கும் 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இதற்கென நபார்டு வங்கி மூலம் 1 சதவீதம் வட்டியில் கடன் பெற்று இந்த பணிகள் மேற்கொள்ளப்படும்.

**10. கூட்டுறவு சங்க தயாரிப்பான மங்களம் மஞ்சள் தூள் மற்றும் பென்னாகரம் புளியை அதிக அளவில் சந்தைப்படுத்துதல்.**

ஈரோடு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தின் ஆலை மூலமாக தயாரிக்கப்படும் தரமான கலப்படமற்ற மங்களம் மசாலா என்ற பெயரில் மஞ்சள் தூள் 5 கோடி ரூபாய்க்கு 400 மெ.டன் விற்பனையாகிறது.

இந்த மஞ்சள் தூளை அமுல் நிறுவனத்தை போல பிரபலப்படுத்துவதற்கும், நெடுஞ்சாலைகளில், ஆவின் பாலகங்கள் இருப்பதைப்போல, தோற்றப் பொலிவுடன் விற்பனையகங்களை ஏற்படுத்துவதற்கும், FM ரேடியோ மற்றும் விளம்பரங்கள் மூலம் பிரபலப்படுத்துவதற்கும், சந்தையின் தேவைக்கேற்ப உற்பத்தித்திறனை பெருக்குவதற்கும், ஆலைக்கு ISO தரச்சான்றிதழ் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதே போன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் உள்ள புளி மிகவும் தரம் வாய்ந்தது என்பதால் இதனையும் ஈரோடு மஞ்சள் தூளை போல பிரபலப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**11. பொது விநியோகக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.**

தமிழ்நாடு முழுவதிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் 33,068 நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் 20,364 பணியாளர்களுக்கும் 23 கூட்டுறவு பயிற்சி நிலையங்களிலும், 394 அணிகளாக, பல்வேறு கட்டங்களாக, 1 நாள் பயிற்சி முகாமை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென ஏற்படும் செலவினத்தை (ரூ.2.04 கோடி) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி அல்லது கூட்டுறவு கல்வி நிதி மூலம் கூட்டுறவு துறையே ஏற்கும்.

## 12. கூட்டுறவு மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு துறை மூலம் 303 மருந்தகங்களில் விற்கப்படும் மருந்துகளுக்கு 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த மருந்தகங்கள் நியாயவிலைக் கடைகள் போல வெளி சந்தைகளில் மருந்து பொருட்களின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்கும் மிகவும் முக்கியமான சமூகப் பங்காற்றுகின்றன. இந்த எண்ணிக்கையை அடுத்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 60 கடைகள் வீதம் 600–ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **நியாயவிலைக் கடைகளை மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதற்காக குழு அமைத்தல்.**

காலத்திற்கேற்றவாறு நியாயவிலைக் கடைகளை மறுசீரமைப்பது குறித்து ஆராய மாநில அளவில் உணவு பொருள் வழங்கல் துறை ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தின் செயல்பாட்டாளர் மற்றும் உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**14. 33 கூட்டுறவு அமைப்புகளின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துதல்.**

தமிழ்நாட்டிலுள்ள 33 கூட்டுறவு சங்கங்களில் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் வாடிக்கையாளர்களின் விலை மதிப்பற்ற நகைகள் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கும் ரூ.416.00 லட்சத்தில் பாதுகாப்பு பெட்டகப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான செலவினம் கூட்டுறவு சங்கங்களின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**15. மாநில முழுவதும் 60 புதிய தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம் அமைத்தல்**

தமிழ்நாடு அரசின் கூட்டுறவு துறை வங்கிகளில் ஏற்கனவே 96 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் உள்ளன. மேலும் புதிதாக இந்த ஆண்டு 60 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் கீழ்க்கண்டவாறு பொருத்தப்படும்.

| | |
|---|---|
| தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் கிளைகள் | – 6 |
| சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள் | – 10 |
| மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் | – 44 |
| **மொத்தம்** | **– 60** |

இதற்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1.98 கோடி ஆகும். இதற்காக நிகழும் செலவினம் முழுவதையும் அந்தந்த வங்கிகளே ஏற்கும்.

**16. ஏலகிரி பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கிடங்கு கட்டுதல்.**

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் வாழும் பழங்குடி மக்கள் தங்களது விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கும் பொருட்களை சேமித்து வைப்பதற்கும், மதிப்பு கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.25.00 மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

**17. புதூர்நாடு பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கிடங்கு கட்டுதல்.**

திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு மலையில் வாழும் பழங்குடி மக்கள் தங்களது விவசாய உற்பத்தி மூலம் கிடைக்கும் பொருட்களை சேமித்து வைப்பதற்கும், மதிப்பு கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.25.00 மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

**18. ஒரத்தநாடு விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு கிடங்கு கட்டுதல்.**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு அங்குள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சேமித்து வைப்பதற்கும், மதிப்பு கூட்டும் பொருட்களாக மாற்றுவதற்கும் அங்கு 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று ரூ.60.00 மதிப்பீட்டில் கட்டப்படும். இதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

19. **நாமக்கல் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு புதிய ஏலக்கூடம் கட்டுதல்.**

நாமக்கல் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு அங்குள்ள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஏலம் விடுவதற்கு வசதியாகவும் பொருட்களை கொண்டு வருவதற்கு ஏற்றவாறு ஒரு அணுகு பாலத்தை கட்டுவதற்கும் ரூ.95.00 மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

**20. ராசிபுரம் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உள்ள ஏலக்கூடத்திற்கு கூரை அமைத்தல்.**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் விவசாய உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உள்ள ஏலக்கூடத்திற்கு கூரை அமைப்பதற்காக ரூ.150.00 மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் மழைக்காலங்களில் பருத்தி பொதி மூட்டைகள் நனைந்து வீணாவது தடுக்கப்படும். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் கட்டுப்படுத்தப்படும். மேலும், வெயில் காலங்களில் விவசாயிகள் இதனை பயன்படுத்திக்கொள்ளவும் இயலும். திட்டம் தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மானியத்தில் கட்டப்படும்.

**21. பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் அலுவலக கட்டிடம் கட்டுதல்.**

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ஆண்டொன்றுக்கு ரூ.21.77 கோடியில் வர்த்தகம் ஆகிறது. கடந்த ஆண்டில் நிகர லாபமாக ரூ.27.49 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனை பண்டக சாலையில் வைப்புத் தொகையாக ரூ.3.00 கோடி உள்ளது. இந்த வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்காக தற்போது கீழ்த்தளத்தில் கடையும் அலுவலகமும் ஒன்றாக இருப்பதை பிரித்து, முதல் மாடியில் புதிய அலுவலகம் ரூ.33.00 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**22. நகர கூட்டுறவு வங்கிகளில் முதல் முறையாக 10 தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்களை (ATM) நிறுவுதல்.**

தமிழ்நாட்டில் உள்ள 108 நகர கூட்டுறவு வங்கிகள் எதிலும் தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரம் (ATM) வசதி இல்லை. எனவே நடப்பாண்டில், முதற்கட்டாக 10 தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரங்கள் (ATM) கீழ்க்கண்ட நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நிறுவப்படும்.

1. ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிபாளையம்
2. சென்னை மாவட்டம் – ஜார்ஜ்டவுன்
3. காஞ்சிபுரம் மாவட்டம் – பெரிய காஞ்சிபுரம்
4. காஞ்சிபுரம் மாவட்டம் – சின்ன காஞ்சிபுரம்
5. விருதுநகர் மாவட்டம் – பூபதிராஜீ
6. கோயமுத்தூர் மாவட்டம் – கோயமுத்தூர்
7. கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி
8. விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம்
9. திருப்பூர் மாவட்டம் – திருப்பூர்
10. தஞ்சாவூர் மாவட்டம் – நிக்கல்சன்

இதற்கென ஆகும் செலவு ரூ.50.00 இலட்சம் அந்தந்த வங்கிகளால் மேற்கொள்ளப்படும்.

**23. திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவு துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பித்தல்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் கூட்டுறவு துறையின் சார்பில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நிலம் தெரிவு செய்யும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த திட்டம் நிறைவேறும்பொழுது இந்த பகுதியில் உள்ள 2,000–க்கும் மேற்பட்ட ஏழை எளிய மாணவ மாணவியர் பயன்பெறுவர். இதற்காக ஆகும் செலவினம் ரூ.20.00 கோடி முழுவதையும் கூட்டுறவு துறையே ஏற்கும்.

**24. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 10 புதிய கிளைகள் ஏற்படுத்துதல்.**

தமிழகம் முழுவதும் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 10 எண்ணிக்கையில் புதிய கிளைகளை கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் இந்த வருடம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. மதுரை (தேவாரம் புதிய கிளை)
2. மதுரை (கூடல் நகர் புதிய கிளை)
3. புதுக்கோட்டை (டி.வி.எஸ். நகர் புதிய கிளை)
4. புதுக்கோட்டை (தேனிப்பட்டி புதிய கிளை)
5. தஞ்சாவூர் (சோழபுரம் புதிய கிளை)
6. நாகப்பட்டினம் (ஆயக்காரன்புரம் புதிய கிளை)
7. திருவாரூர் (கச்சனம் புதிய கிளை)
8. தூத்துக்குடி (வாகைக்குளம் புதிய கிளை)
9. வேலூர் (குரிசிலாப்பட்டு புதிய கிளை)
10. வேலூர் (புதுப்பேட்டை புதிய கிளை)

இந்த கிளைகளை ஆரம்பிப்பதற்கு ரூ.230.00 இலட்சம் செலவாகும். இந்த செலவினம் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**25. திண்டுக்கல் கூட்டுறவு பண்டகசாலைக்கான புதிய கட்டடம் கட்டுதல்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட கூட்டுறவு பண்டகசாலையில் ஆண்டொன்றுக்கு ரூ. 33.70 கோடி வர்த்தகமாகிறது. கடந்த ஆண்டில் நிகர இலாபமாக ரூ.2.75 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது. பழமையான இந்த கட்டடத்தில் போதிய இடவசதி இன்றி பண்டசாலை மற்றும் அலுவலகம் இயங்கி வருகின்றன. இதனுடைய வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக, இந்த கூட்டுறவு பண்டகசாலைக்கு புதிய கட்டடம் கட்ட கூட்டுறவு துறைக்கு சொந்தமான நிலம் 7,050 சதுர அடி உள்ளது. இந்த இடத்தில் புதிய பண்டசாலை அமைக்கப்படும். இதற்காகும் செலவினம் ரூ. 1.75 கோடி செலவினை கூட்டுறவு துறையே ஏற்கும்.